வா.சா 1 முத்துலெட்சுமி **O.S**.No145/2019 08.09.2022

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

என் அப்பா வழி தாத்தா பெயர் மாரிமுத்து என்றால் சரிதான். என் தகப்பனாருடன் பிறந்தவர்கள் கணேசன், அண்ணாமலை சுப்புலெட்சுமி ஆகியோர் என்றால் சரிதான். அதில் சுப்புலெட்சுமி வாரிசுகள் இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 1வது தபசில் 4 முதல் 10 அயிட்ட சொத்துக்கள் என் தாத்தா வழி பூர்விக சொத்து என்றால் சரிதான். வாசாஆ 3 பட்டாவில் என் தகப்பனார் சர்க்கரை, கணேசன், அண்ணாமலை ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் சொத்தை பிரித்து கொண்டார்கள். எப்போது பாகம் பிரித்து கொண்டார்கள் என்றும், என் சித்தப்பாக்களுக்கு எந்த சொத்துக்கள் பிரித்து கொடுக்கப்பட்டது என்று என்னுடைய வழக்கிலும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் உயிரோடு இருக்கும்போது பிரித்துகொண்டார்கள். வடபட்டி கிராமத்தில் சர்வே எண். 254/1D மற்றும் 254/2 B ஆகிய சொத்துக்களை விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன இரண்டு சர்வே எண்ணில் உள்ள நிலங்களை என் சித்தப்பா கணேசன் தான் விவசாயம் செய்து வருகிறார் என்றாலும் அது எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் பூர்விக கொத்து சம்பந்தமாக யஎன் தகப்பனாருக்கும் அவருடன் பிறந்த கணேசன் மற்றும் அண்ணாமலைக்கு எந்த வித பாக பிரிவினையும் நடைபெறவில்லை என்பதால் அவர்களும் இந்த வழக்கில் அவசிய தரப்பினர் என்றாலும் அவ்வாறு அவர்களை சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மேலே சொன்ன 1வது தபசு சொத்து 4 முதல் 10 அயிட்ட சொத்துக்களில் என் சித்தப்பாக்களுக்கும் பாகம் உள்ளதால் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஒரு நிலத்தில்

வீடு இருந்தால் அதற்கான பட்டாவில் மனை நிலம் என்று தான் குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். 3வது தபசு சொத்து ஒரு வீடு என் தகப்பனாருக்கு உள்ளது என்றும் அதற்கு வாசாஆ 7 பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதில் மனை நிலம் என்று குறிப்பிடாமல் புஞ்சை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான் ஆனால் அதில் வீடு உள்ளது. 3வது தபசு சொத்து எந்த ஒரு வீடு இல்லை என்றாலும் அவ்வாறு வீடு இருந்தால் அதற்கு வரி ரசீது, மின்கட்டன ரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு பிறகு சாத்தூர் தாலுகா ஓ. மேட்டுபட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு பிறகு ஓ. மேட்டுபட்டி கிராமத்தில் வசித்து வருவதால் நான் ஒருபோதும் 1ம் பிரதிவாதியுடன் தாவா சொத்துக்களில் கூட்டு அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. என் திருமணத்தின்போது என் தகப்பனார் உரிய சீர்வரிசை செய்துதான் திருமணத்தை நடத்தி வைத்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனாரும் என் உடன்பிறந்த சகோதரரும் எனக்கும் என் சகோதரிகளுக்கும் சீர்வரிசை செய்து நல்ல முறையில் திருமணம் செய்து கொடுத்ததால் நாங்கள் அனைவரும் தாவா சொத்துக்களில் எங்களுக்குள்ள உரிமையை வாய்மொழியாக 1ம் பிரதிவாதிக்கு விட்டு கொடுத்து விட்டோம் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை